ISSN 2320-4842 (P)

# புறநானூற்றில் விளிம்பு நிலை வாழ்வியல்

**முனைவர் மு. வையாபுரி**

உதவிப் பேராசிரியர்

தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

சென்னை - 15

## முன்னுரை

தமிழ்ச் சமூக வரலாற்றைப் பற்றி அறிய உதவும் பல்வேறு கூறுகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. தமிழக வரலாற்றில் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளிலிருந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட அல்லது மையப்படுத்தப்பட்டச் சமூகத்திற்கு வெளியே வாழ்ந்த மனிதர்களைப் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியத்தில், குறிப்பாகப் புறநானூற்றில் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றை விளிம்புநிலை ஆய்வு நோக்கில் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்பு

தமிழ்ச் சமூகத்தின் தனித்த அடையாளமாகத் திகழும் சங்க இலக்கியம் பல்வேறு சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. பல நூற்றாண்டு கால இலக்கிய, இலக்கண வளமையின் தொடர்ச்சியாகவே சங்க இலக்கியம் போன்றதொரு செவ்வியல் இலக்கியம் தோன்ற முடியும். சங்க இலக்கியம் அது படைக்கப்பட்ட காலத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை தன்னில் பதிவு செய்திருப்பதோடு, நீண்ட நெடிய தமிழிலக்கிய பாரம்பரியத்தின் ஊற்றுக் கண்ணாகவும் திகழ்கிறது.

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய மொழியாகத் தமிழ்மொழி அமைந்திருப்பதால்தான் 'சங்க இலக்கியம்' என்னும் புதையல் நமக்குக் கிடைத்துள்ளது. ஒரு மொழி செவ்வியல் இயல்புகளை முழுமையாகக் கொண்டுள்ளது என்றால் அதன் பின்புலம் என்னவாக இருக்கும் என்பதை நாம் ஆராய முற்படவேண்டும்.

மொழி என்பது அடிப்படையில் மனித இனத்தின், ஓர் இனக்குழுவின், தொடர்புக் கருவியாகவும், கருத்துப் புலப்பாட்டுக் கருவியாகவும் உள்ளது. ஒரு பண்பட்ட சமூகத்தினால் மட்டுமே மொழியைச் செம்மையாகக் கையாள முடியும். தமிழ் போன்றதொரு தனித்தன்மை மிக்க, செவ்வியல் மொழி தோன்ற வேண்டுமானால் அதனை பேசிய தமிழ்ச் சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பண்பட்ட தலைசிறந்த நாகரிகம் உடைய சமூகமாக விளங்கியது என்பது புலப்படுகிறது. எல்லா வளங்களும் நிரம்பிய சீர்மிகு சமூகத்தால் தான் ஒரு சிறந்த இலக்கியத்தைப் படைக்க முடியும்.

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். மன

உணர்வுகளைப் பதிவு செய்யும் பண்பு இலக்கியத்திற்கு மட்டுமே உண்டு. சங்கப் புலவர்கள் தங்கள் உணர்வுகளை, அனுபவங்களை,இயற்கையோடு இயைந்த வாழ்வை தாங்கள் உணர்ந்தவாறு தங்களுடைய பாடல்களில் பதிவு செய்துள்ளனர். எனவேதான் சங்க இலக்கியத்தைத் திணை இலக்கியம் என்பர். உலகில் வேறெந்த மொழியிலும் திணை அடிப்படையில் அமைந்த இலக்கியங்கள் இல்லை என்பது அனை வரும் தெளிந்த ஒன்று. அதேபோன்று அகம் புறம் என்ற பாகுபாடும் சங்க இலக்கியத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும்

காதலும் வீரமும் மட்டுமே சங்க இலக்கியத்தில் பேசப்படவில்லை. உள்ளதை உள்ளவாறு பிரதிபலிக்கும் உயரிய பண்பின் காரணமாக, அது தோன்றிய காலத்தின் சமூக அமைப்பை, அதன் செழிப்பை, வாழ்நிலைகளை அப்படியே அதன் போக்கில் பதிவு செய்துள்ளது. அந்தப் பதிவுகளே தமிழ் இனத்தின் வரலாறாகவும் திகழ்கிறது.

## சங்க இலக்கியமும் இனக்குழு வாழ்க்கையும்

பொதுவாக வரலாறு என்பது ஒரு சார்பானது என்பர். ஆனால் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மக்கள் வாழ்க்கை, அக்காலச் சமூகத்தில் அவர்களுக்குக் கிடைத்த உலகியல் அனுபவங்களாக உள்ளன. ஏனெனில் புலவர்கள் மட்டுமே பாடவில்லை. அதில் அரசன் முதல் சமூகத்தின் கீழ்நிலை வரை உள்ள அனைத்து தொழில் பிரிவினர்களும் பாடியுள்ளனர். ஒவ்வொருவரும் அவர்களுடைய உலகியல் அனுபங்களைப் பதிவு செய்துள்ளனர். அது பிறர் கூற்றாகப் புலவன் பாடியதாக இருந்தாலும் தான் வாழ்ந்த சமகாலச் சமூகத்தின் பிரதிநிதியாகத்தான் புலவன் செயல் பட்டுள்ளான் எனலாம்.

அவ்வகையில், சங்க இலக்கியம் தனது காலத்திய பல்வேறு இனக்குழு மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அதனுள் எல்லா வளங்களையும் பெற்று சமூகப் பாதுகாப்போடு செம்மாந்த வாழ்வு வாழ்ந்த செல்வந்தனையும் காணமுடியும்: அதே நேரத்தில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி அலைந்து திரியும் நிலையற்ற, சமூக, அரசில், பொருளாதார நிலைகளில் பாதுகாப்பற்ற விளிம்பு நிலை இனக்குழு வாழ்நிலையையும் காணமுடியும். இவ்வாறு முற்றிலும் இருவேறுபட்டச் சமூக வாழ்நிலைகளைப் பிரதிபலிப்பதில் சங்க இலக்கியமும் சரி அதனைப் பாடியவர்களும் சரி ஏதும் பாரபட்சம் காட்டவில்லை என்பதற்கு சங்க இலக்கியங்களே தகுந்த சான்றாகும்.

சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்படாத, ஆனால் ஏறக்குறைய சங்க காலத்தின் தொடக்கத்திலேயே தமிழ்ச் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பிறப்பால், தொழிலால் ஒருவனை இழிவானவனாகப் பார்க்கப்படுகிற சாதிய வேறுபாடுகள் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியம் முழுவதிலும் பரவலாகப் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

இந்தக் கட்டுரை தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள விளிம்புநிலை மக்கள் பற்றி காணப்படும் செய்திகளை ஆய்வு செய்கிறது. குறிப்பாக பாணன், எயினன் - பறையன், துடியன், கடம்பன் முதலான குடிகள் பற்றிப் புறநானூற்றில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்கிறது.

## புறநானூறும் விளிம்புநிலை மக்களும்

ஓர் இலக்கியத்தை ஆய்வு செய்யும்போது அவ்விலக்கியம் தோன்றிய காலச்சூழல் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய

ஒன்றாகும்.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடைய புறநானூற்றிற்கும் இது பொருந்தும். இன்றைய ஆய்வுக்கோட்பாடுகளைக் கொண்டு புறநானூற்றை ஆய்வு செய்யும்போது நாம்சில இடர்பாடுகளைச் எதிர்கொள்ள நேரிடும். ஒவ்வொரு ஆய்வாளனும் "புறநானூறு" போன்ற ஓர் இலக்கியத்தை அவரவர் புரிதல்களுகளுக்கு ஏற்ப அணுகமுடியும். இது கலை இலக்கிய ஆய்வுகளுக்கே உரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

அவ்வகையில் இக்காலத்தில் Subaltern studies என்று சொல்லப்படுகிற அடித்தள மக்கள் குறித்த ஆய்வுமுறையில் இக்கட்டுரை அமைகிறது. விளிம்புநிலை மக்கள் ஆய்வுகள் ரணஜித் குகா மற்றும் அவரது குழுவினரால் 1980களில் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு வரலாற்றாய்வு முறையாகும் (விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல் களும்: 199&11). இவ்வாய்வு முறை நோக்கில் புறநானூற்றை ஆய்வு செய்ய இயலாதெனினும் அதற்கான ஏதுக்கள் புறநானூற்றில் உள்ளன என்பதை எவரும் மறுக்க இயலாது.

**விளிம்புநிலை : விளக்கம்**

விளிம்புகள் ஒரு படித்தானவை அல்ல: ஒற்றைக் கருத்தியல் கொண்டவையுமல்ல; விளிம்பு என்பது ஒரு ஒப்பீடான கருத்தாக்கமும்கூட. ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கும் ஒன்று அதனினும் விளிம்புடன் ஒப்பிடும்போது மையமாகச் செயல்படுகிற வாய்ப்பும் உண்டு. விளிம்புகளிடையே இத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் மையத்தை எதிர்ப்பது, மையத்திலிருந்து விலகியோடுவது என்கிற அடிப்படையில் அவற்றின் பொதுக்கூறு அமைந்திருக்கும். இங்கு “விளிம்பு” என்பதை வர்க்க அடிப்படையிலான வரையறையாக மட்டும் கொள்ள இயலாது. வர்க்கம்,சாதி, பால், நிறுவனம் எனப் பல்வேறு கூறுகளால் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகளாக விளிம்புநிலை மக்களை நோக்க வேண்டும்.

**விளிம்புநிலை மக்கள்**

"விளிம்புநிலை மக்கள்" என்னும் கருத்துநிலையில் சங்க காலத்தைப் நாம் பார்ப்போமானால் "அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெரும் பிரிவினர் சமூகத்தின் மேல் தளத்தில் இருந்துள்ளனர்" (தமிழர் நாகரிகமும் பண்பாடும் 1994:43) சங்கச் சமூகத்தின் அங்கத்தினர்களாக பல்வேறு தொழில் பிரிவினர்கள் இருந்துள்ளனர். குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும் முல்லை நிலத்தவர் ஆயர் என்றும் மருத நிலத்தவர் உழவர் என்றும் நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும் பாலை நிலத்தவர் எயினர், மறவர் என்றும். பெயர் பெற்றனர். மேலும் தச்சர். கொல்லர், குயவர், வண்ணார், வேட்டுவர். நெசவாளர், உமணர் கணியர், பரத்தையர், பறையர், பாணர், துடியர், புலையர், கடம்பர் முதலான பல்வேறு குடியினர் வாழ்த்துள்ளனர் என்பதை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

சங்க இலக்கியங்களால் வெளிப்படுத்தப்படும் தொழில்நிலைகள் பல தலைமுறைகளின் வளர்ச்சியைக் குறிக்கிறது. ஒவ்வொரு தொழிற் பிரிவினரும் தனித் தனிக் குடியினராக மதிக்கப்பட்டனர் என்பதை, அவரவர் தொழிலையும் அடையாகச் சேர்த்துப் புலவர்கள் சிலர் பேசப்படுவது கொண்டு நாம் அறியலாம். தொழில்களை அடிப்படையாகக் கொண்ட மக்கள் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தோன்றிவிட்டது. தமிழகத்துத் தொழிற் பிரிவுகளோடு ஆரியரின் சாதி பற்றிய கருத்தாக்கங்களும் இணைந்தன. இவ்வாறான செயல்பாடுகளை புறநானூற்றிலேயே நாம் காணமுடிகிறது.

"ஒரே தொழிலைத் தொடர்ந்து செய்யும் போக்கினால் பல தொழிற் பிரிவுகள் உருவாக இடமேற்பட்டது. காலஞ் செல்லச் செல்ல இப்பிரிவுகள் எண்ணிக்கையில் பெருகின. சங்க காலத்திலேயே இத்தொழிற் பிரிவுகள் ஒவ்வொன்றும் மரபு வழிப்பட்ட தனித்தனிப் பிரிவாக அமைந்துவிட்டது என்று தெரிகின்றது வரலாற்றாசிரியர் கே.கே.பிள்ளை குறிப்பிடுகிறார். (தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்: 1972)

இவ்வாறு பண்டைத் தமிழ்ச் சமூகம் தொடக்கத்தில் இனக்குழுச் சமுதாயமாக இருந்து நாளடைவில் வேலைப்பிரிவின் காரணமாகத் தொழில் வழிச் சமூகப் பிரிவுகள் கொண்டதாக மாறியது. அவ்வாறு மாறிய பின்னரும் பழைய இனக்குழுச் சமூகக் கூறுகள் தொடர்ந்து நிடித்தன.

மேற்கூறிய சமூகப் பிரிவினரிடையே செல்வ, வறுமை வேறுபாடுகள் தோன்றி நிலைபெற்றிருந்தன என்பதை சங்க இலக்கியம் முழுவதிலும் நாம் காண முடியும். பொருளாதார அடிப்படையில் செல்வர், வறியர் என்னும் வேறுபாடு தோன்றியிருந்ததுபோலவே, பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறு பாடும்தோன்றியிருந்தமையும் புறநானூறு வழிப் புலப்படுகின்றது.

அந்தணர் முதலான பிரிவினர் சமூகத்தின் மேல் நிலையில் வைத்து எண்ணப்பட்டதற்கு நேர்மாறாக அனைவராலும் தாழ்ந்தோராகச் சில பிரிவினர் கருதப்பட்டமை விளங்குகிறது. குறிப்பாக புறநானூற்றில் இது பற்றிய குறிப்புகள் நிரம்ப காணப்படுகின்றன.

இருப்பினும், சங்க காலத் தொழில் பிரிவினர் பற்றிய வரலாறுகளை நாம் விரிவாக அறியமுடியவில்லை. எனினும், தொழில் அடிப்படையில் அமைந்த குடிகள் பலவாக அமைந்திருந்தாலும் சமூகத்தில் அவர்கள் செய்த தொழிலின் அடிப்படையிலோ, சமூகப் படிநிலையின் அடிப்படையிலோ இழிவானவர்களாக வோ, கீழானவர்களாகவோ, மதிக்கப்பட வில்லை என்பதும், ஒவ்வொரு தொழிற் பிரிவினரும் தனித்தனிக் குடியினராக மதிக்கப்பட்டனர் என்பதும், அவரவர் தொழிலையும் அடையாகச் சேர்த்துப் புலவர்கள் சிலர் பேசப்படுவது கொண்டு நாம் அறியலாம். ஆனால் பாணர், எயினர் - பறையர், துடியர், கடம்பன் என்போர் சமூகத்தின் கீழான நிலை யினராக மதிப்பீடு செய்யப்பட்டமை தெளிவாக விளங்குகிறது.

### பாணர்

பாணர் என்போர் சங்க இலக்கியங் களில் பரவலாகப் பேசப்பட்டுள்ளனர். குறிப்பாக புறநானூற்றில் பாணர் (புறம். 12:1-2), கூத்தர் (புறம் 28:11-14), கோடியர் (புறம் 29:24-27), விறலியர் (புறம்:32:3-4), கிணைமகள் (புறம் 111:3-4), பரிசின் மாக்கள் (புறம்.121:2-3), கிணைமகன்- பொருநன் (புறம்.386-3) எனப் பலவாறாகப் பேசப்பட்டுள்ளனர்.

கண்ணுளர், கோடியர், நாடர், நாடகியர், நிருத்தர், பொருநர், வயிரியர், வினைஞர் என கூத்தர் என்போரை குறிப்பிடுகிறது திவாகர நிகண்டு. (திவாகரம் நிகண்டு, இரண்டாம் தொகுதி: 1993) இவர்கள் சங்க காலம் முதற்கொண்டு இசைக் கலையையும் ஆடற்கலையையும் வளர்த்து வந்த பெருமக்களாவர். சங்கச் சமூகத்தில் புலவர், பாணர், பொருநர், கூத்தர் ஆகிய நாள்வகைப்பட்டவர்களும் பரிசில் மாக்களாக இருந்துள்ளனர். இதனை

*"வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்*

*பரிசிலர்க் கடையா வாயிலோயே" (புறம்.06-45)*

*"எத்திசைச் செலினும் மத்திசைச் சோறே" (புறம்.206:13)*

என்பதிலிருந்து அறிய முடிகிறது.

பாணர்களும் புலவர்களும் அரசர்களைப் பாடி பொன்னும் பொருளும் யானையும் தேரும் நாடும் பரிசாகப் பெற்றனர். இதனை,

*"மறம்பாடிய பாடினியும்மே*

*ஏருடைய விழுக்கழஞ்சிற்*

*சீருடைய விழைபெற்றிசினே*

*இழைபெற்ற பாடினிக்குக்"*

*(புறம்.11:11-14)*

*"ஓள்ளழல் புரிந்த தாமரை*

*வெள்ளி நாராற் பூப்பெற்*
*றிசினே" (புறம்.11: 17-18)*

*"பாணன் சூடிய பசும்பொற் றாமரை*

*மாணிழை விறலி மாலையொடு*
*விளங்க" (புறம்.141:1-2)*

என்பதால் அறியலாம்.

எனினும், சங்க இலக்கியம் முழுவதும் அவர்கள் உணவுக்காகவும் உடைக்காக வும் இன்ன பிற பரிசுகளுக்காகவும் அரசர்களையும் இனக்குழுத் தலைவர்க ளையும் தேடி அலைந்து திரியும் நாடோடிக் கூட்டம் போன்றே காட்டப் படுகின்றனர். பெரும்பாலான பாடல்கள் பாணர் கூற்றாகப் புலவர் பாடுவதாக இடம்பெற்றுள்ளன. "பழுமரம் தேரும் பறவைகள் போல" என்பதற்கு ஏற்ப பாணர்கள் அரசர்களையும் செல்வர்க ளையும் நாடிச்சென்று பாடிப் பரிசில் பெற்று தமது வறுமைத்துயர் நீங்கினர் என்பதை,

*"நல்யா ழாகுளி பதலையொடு*
*சுருக்கிச்*

*செல்லா மோதில் சில்வளை விறலி*

*களிற்றுக்கணம் பொருத கண்ணகன்*
*பறந்தலை*

*விசும்பா டெருவை பசுந்தடி*
*தடுப்பப்" (புறம். 64:1-4)*

என்னும் பாடல் வழி உணரமுடிகிறது. சங்க இலக்கியங்களில் பாணர்கள் குறிக்கப்படும் இடங்களில் எல்லாம் அரசர்களோடும் புலவர்களோடும் கூடி மகிழ்ந்துண்ணும் நிலையிலேயே காட்டப் படுகின்றனர்.

திவாகர நிகண்டு "புலவர்" என்னும் சொல்லுக்கு அறிஞர், கலைஞர், கவிஞர், ஆடுநர், பாடுநர், பொருநர் என்று பொருள் தருகிறது. மேலும் 'பொருநர்' என்னும் சொல்லுக்குப் பெரும்போர்த் தலைவர், கூத்தர், தறுகண்ணாளர், புலவர், பெருங்கூத்தின் கோடியர், பெரும்படைத் தலைவர் என்று பொருள் தருகிறது. இதன் மூலம் பாணர்கள் புலவர்களாயிருந்தமையும் பொருநர் படைத்தொழிலோடு 'பாண்'தொழில் செய்தமையையும் அறிய முடிகின்றது.

புலவர் பாடவும் பாணரும் கிணைப்பொருநரும் இசைக்கவுமான கூட்டு முயற்சியால் சங்க சமூகத்தில் இயலும் இசையும் சிறப்புற்றன எனலாம். ஆனால் இன்று போலவே அன்றும் உண்மைக் கலைஞர்கள் வறுமையில் உழன்றனர். புறநானூற்றில் பாணர்கள் கீழ்மக்களாகக் காட்டப்படவில்லையாயி னும் பிற சங்கப் பிரதிகளில் அவ்வாறு காட்டப்பட்டுள்ளனர். தலைவன் தரும் பொருளைப் பெற்றுக் கொண்டு அதற்குக் கைமாறாக நாளும் புதிய பரத்தையரைத் தேடித்தரும் இயல்பின னாகப் பாணன் இழிந்துபோன நிலையை மருதக் கலியிற் காண முடிகிறது. பாணனைத் தூண்டிலாகக் கொண்டு தலைவன் பரத்தையராகிய மீனினைப் பெறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

*" பொய் போர்த்துப் பாண் தலை*
*யிட்ட பலவல் புலையனைத்*

*தூண்டிலா விட்டுத்*
*துடக்கி" (கலி.85:22-23)*

பாடலைத் தலைக்கீடாகக் கொண்டு பொய்மையைத் தன் தொழிலாகக்

கொண்ட புலையன் எனப் பாணன் இழித்துப் பேசப்படுகிறான். பெருவீரர்க ளையும் வள்ளல்களையும் பாடி, அவர்கள் அன்புடன் தரும் பரிசிலைக் கொண்டு வாழ்ந்த கலைஞர்கள்; போகப் போக இழிநிலையுற்றமையை மருதக் கலிச் செய்யுட்கள் காட்டுகின்றன எனலாம். கலித்தொகையும் "பரிபாடலும் தமிழக வரலாற்றில் வீர யுகத்திற்கடுத்து வேளாளர் மேனிலைக் காலத்துக்குரியன என்பது க. சிவத்தம்பியின் கருத்தாகும்.

பாணர்கள் உற்ற இழிநிலைக்குச் சமூக மாற்றமே காரணம் என்று அவர் கூறியுள்ளார். (Drama in ancient Tamil society: 1981:243). தமக்கென ஒரு நிலையற்ற வாழ்வைக் கொண்டிராத, மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை போன்ற வற்றிற்காக அரசர்களையும் இனக்குழுத் தலைவர்களையும் அண்டிப் பிழைத்த இது போன்ற ஏதிலிகளை விளிம்புநிலை மனிதர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

### துடியன் - புலையன்

சங்கச் சமூகத்தில் 'துடி'ப் பறை கொட்டுபவன் துடியன் எனப்பட்டான் என்பதை அறிகிறோம். பறையரும் துடிய ரும் ஒரே தொழில்செய்தனரா? அல்லது இருவரும் வெவ்வேறானவர்களா? என்பதை அறிவதில் சற்று குழப்பம் உள்ளது. ஏனெனில் சங்க இலக்கியத்தில் குறிப்பாக புறநானூற்றில் ஒரே இடத்தைத் தவிர (புறம்.335) பிற இடங்களில் “பறையன்” என்ற சொல்லாட்சி இல்லை. தமிழ் மரபில் சங்க காலத்திற்கு பிறகு பறையர்கள் புலையர்கள் என்ற பெயரில் அடையாளப் படுத்தப்பட்டனர். குறிப்பாக பக்தி இயக்க கால இலக்கியங் களில் இது பரவலாக்கப்பட்டது எனலாம். ஆனால் சங்க இலக்கியங்களில் புலையன், துடியன் ஆகிய இருவரும் இழிசினர், இழிபிறப்பாளர் என்றே குறிப்பிடப்படுகின்றனர். இருவரும் ஒருவரே என எண்ணுவதற்கும் இடமுண்டு, துடி என்னும் பறையைக் கொட்டுபவன் துடியன் என்றும் "போர் மறவர்க்கு அவர்தம் தலைவரின் பணி யைத் துடி கொட்டித் தெரிவிப்பவன்” என்றும் புறநானூறு குறிப்பிடுகிறது.

*"ஒன்றிரு முறையிருந் துண்ட பின்றை*

*உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்*

*பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றது. (புறம் 269:5-7)*

'புலையன் என்பதற்கு பெண்பாற்பெயர் 'புலைத்தி' என்பதாக சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'புலைத்தி' என்னும்சொல் பொதுவாக 'இழிந்தோள்' என்னும் பொருளிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளது. தெய்வமேற்பட்ட புலைத்தி குதித்தாடுதலைப் புற்றிப் புறநானூற்றுப் பாடலொன்று கீழ்வருமாறு குறிப்பிடுகி ன்றது.

*முருகு மெய்ப் பட்ட புலைத்தி போலத்" (புறம் 259:5)*

புலைத்தி என்பவள் ஆடைவெளுக்கும் தொழிலினை மேற்கொண்டிருந்ததை,

*"களர்ப்படு கூவல் தோண்டி நாளும்*

*புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை" (புறம் 311:1 - 2)*

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

தண்ணுமையை முழக்கி வீரர்கள் போருக்குரிய பூக்கொள்ளும் நாளை அறிவித்தவனை இழிந்தோனாகப் புறநானூறு குறிப்பிடுகின்றது. துடி கொட்டுபவனை இழிந்த பிறப்பையுடை யவனாக இந்நூல் குறிப்பிடுகின்றது.

*"துடி யெறியும் புலைய*

*எறிகோல் கொள்ளும் மிழிசின"(புறம். 287:1 -2)*

இதன்மூலம் புலையனும் இழிசின்னும் ஒருவரே என்றுணரலாம். இடுகாட்டிலி ருந்து இறந்தோர்க்குச் செய்யும் சில

சடங்குகளைச் செய்தோரும் புலையர் என்றே சுட்டப்படுகின்றனர்.

*" கள்ளி போகிய களரி மருங்கின்*

*வெள்ளி ினிறுத்த பின்றைக் கள்ளொடு*

*புல்லகத் திட்ட சில்லமிழ் வல்சி*

*புலைய னேவப் புனல்மேல் லமர்ந்துண்டு" (புறம்.360:16 -19)*

புறநானூறு குறிப்பிடும் மேற்கண்ட புலையர் பற்றிய செய்தி, சமண காப்பியமான சீவகசிந்தாமணியில்,

*உப்பு இலிப் புழுக்கல் காட்டுள்*

*புலைமகன் உகுப்ப ஏகக்*

*கைப் பலி உண்டி யானும் (சீவக.2984)*

என்று குறிப்பிடப்படுவது இங்கு ஒப்பு நோக்குதற்குரியது. துடி கொட்டுவோன், தண்ணுமை முழக்குவோன். இடுகாட்டில் சடங்கு செய்பவன் என்னும் இவர்களை இழிந்தோர்களாகச் சுட்டியது போலவே தோல்வார் கொண்டு கட்டில் பின்னுபவனையும்,

*"கட்டி விணக்கு மிழிசினன் கையது" (புறம்.82:3)*

என்று புறநானூறு இழிசினனாகக் குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் ஆரியரின் செல்வாக்கின் காரணமாக இது போன்ற கருத்தாக்கங்கள் நிலவியதா? அல்லது ஆரியரின் செல்வாக்குக்கு முண்பே தமிழ்ச் சமூகத்தில் இவ்வகையான கருத்தாக் காங்கள் இருந்தனவா? என்பது ஆழ்ந்த ஆய்வுக்குரியது.

**கடம்பன்**

'கடம்பன்' என்னும் சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில் (புறம். 335) தான் இம்பெற்றுள்ளது. எனினும் புறநானூற்றில் இவர்களோடு தொடர்புடைய 'சில பாடல்களும் காணப்படுகின்றன. திவாகரம் நிகண்டு மருத நில மக்கள் (கழனிக்கு அடைத்தவர்) என்பதற்கு உழவர், கடைஞர், கம்பளர், களமர், கிளைஞர், மள்ளர், வினைஞர் என்று பொருள் கூறுகிறது. இவர்களுள் களமர், மள்ளர் என்போர் கடம்பன் என்போருடன் தொடர்புடையவர்களாகக் கொள்ள இடமுண்டு. இவர்கள் புறநானூற்றில் 'தொழுவர்' 'மனைக் களமர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் நெல்லறுத்தல், அவற்றைக் களத்திற்கு கொண்டு சென்று அடித்தல் முதலான வேலைகளைச் செய்துள்ளனர். இதனை,

*'நெல்லரி தொழுவர் கூர்வான் மழுங்கிறீ" புறம். 379.3)*

*"மனைக் களமரொடு மாவென்கோ" (புறம் 387:25)*

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. இதில் 'நெல்லரி தொழுவர் என்பதற்கு நெல்லறுக்கும் களமர் என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. அதுபோல 'மனைக் களமர்' என்பதற்கு மனைக்கண் இருந்து பணிபுரியும் 'களமர்' என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இவர்கள் மருதநிலக் குடிகளான வேளாளர் முதலிய நில உடைமையாளர்களின் கூலிகளாக, அடிமைகளாக இருந்திருக்க வாய்ப்புண்டு. தற்காலத்தில் தமிழகத்தில் வாழும் "பள்ளர்" இவர்கள் வழிவந்தவர்களாவர் என ஊகித்தறியலாம்.

இவர்களைப் பற்றிக் குறிப்பிடும் திரு. எட்கார் தர்ட்ஸன், பள்ளர் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களில் கானப்படும் பயிர்த் தொழில் செய்யும் கூலியாட்கள் என்றும், வளம்படைத்த தமிழ்நாட்டவர் நிலங்களை உழுதலே இவர்கள் முக்கியத் தொழில் என்றும், தொடக்ககாலத்தில் இவர்கள் வேளாளர்களின் அடிமைகளாக இருந்தனர் என்றும். பள்ளர்கள் எப்பொழுதும் பிராமணர்களுக்கும் கவுண்டர் களுக்கும் உரிய நஞ்சை நிலங்களில் உழைக்கும் பண்ணையடிமை களாகவே

இருந்து வந்துள்ளனர் (தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி-8:475-476) என்றும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து புறநானூற்றில் குறிப்பிடப்படும் தொழுவர், களமர் என்போரே இன்றைய பள்ளர் எனத் துணியலாம். இவர்கள் சங்க காலத்தில் உணவு, உடை முதலிய அடிப்படைத் தேவைகளுக்காக பண்ணையடிமைகளாகச் சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. புறநானூறும் இதனைப் பதிவு செய்துள்ளது.

### வள்ளுவன்

பறையர்களின் ஒரு பிரிவாக இன்று காணப்படும் இப்பிரிவினர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியம் முழுவதிலும் காணப்படுகின்றன. அன்றைய தமிழகத்தின் சில பகுதிகளில் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர் என்பதை புறநானூற்றின் வழி நாம் அறிய முடிகிறது. புறநானூற்றின் 138, 139, 140, 380 ஆகிய பாடல்களில் நாஞ்சில் வள்ளுவன் என்னும் குறுநில மன்னன் குறிப்பிடப் பட்டுள்ளான். திருக்குறள் செல்வத்தைச் செந்தமிழுக்கு வழங்கி உலகப் புகழ் பெற்ற திருவள்ளுவர் போல 'வள்ளுவன்" எனப் பெயர்பெற்ற கொடைவள்ளல் இந்நாஞ்சில் வள்ளுவன். நாஞ்சில் மலையும் அதன் அடிப்பகுதியிலுள்ள நாஞ்சில்நாடும் இவ்வள்ளுவனுக் குரியவை. இவனது முன்னோர்கள் போரில் புறங்கொடாத புகழ் பெற்றவர். இவனை ஒருசிறைப் பெரியனார், மருதநிலநாகனார், ஔவையார் ஆகிய மூவரும் பாடியுள்ளனர். இவன் தென்னவர் வய மறவன் (புறம்380:5) 'நாஞ்சில் பொருநன்' என்றும் குறிக்கப் படுகிறான். இவர்கள் போர் வீரர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் இருந்ததோடு, போருக்குப் புறப்பட வீரர்களை ஏவும் பொருட்டு யானையின் மீது அமர்ந்து தண்ணுமையை ஒலித்து அறிவிக்கும் செயலையும் செய்துள்ளனர். இவர்களைப் புறநானூறு 'யானை மேலோன்' என்று குறிப்பிடுகின்றது.

> "நிறப்படை கொல்கா யானை
> மேலோன்
>
> குறும்பர்க் கெறியு மேவற்
> றண்ணுமை" (புறம் 293:1-2)

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கீழ்நிலைக் குடிகளுள் பறையரின் ஒரு பிரிவினரான இந்த வள்ளுவர்கள் சமூகப் படிநிலையில் சற்று மேனிலையில் இருந்துள்ளனர் எனலாம். எனினும் இவர்களும் தண்ணுமை என்னும் தோற்கருவியை பயன்படுத்துவோர்களாகவே குறிக்கப்பட்டுள்ளனர்.

### பறையரும் எயினரும்

கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் "பறையர்" என்கிற சொல்லாட்சி தமிழ்ப் புலத்தில் இல்லை என்பர் சில ஆய்வாளர். ஆனால் மாங்குடி கிழார் என்னும் புலவர் முல்லை நிலத்துச் சிற்றூர் ஒன்றின் சிறப்பைப் பாடும் புறநானூற்றுப் பாடல் ஒன்று கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

> "துடியன் பாணன் பறையன்
> கடம்பனென்
>
> றிந்நான் கல்லது குடியு
> மில்லை" (புறம் 335:7 - 8)

இதைத் தவிர சங்க இல்கியங்கள் எதிலும் இச்சொல்லாட்சி பயன்படுத்தப் படவில்லை. எனினும் சமூக மாற்றத்தின் காரணமாகப் பிற்காலத்தில் இவர்கள் 'புலையர்' என்னும் சொல்லால் சுட்டப் பட்டுள்ளனர் என்பதை, சங்க இலக்கியங்கள் முழுவதிலும் காணப்படும் குறிப்புகளால் அறியலாம்.

"கொட்டு எனப் பொருள்படும் 'பறை' என்ற சொல்லிலிருந்து 'பறையர்' என்ற சொல் பிறந்ததாக கால்டுவெல் கருதுகின்றார்" (தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி-6,2003:81) ஆயினும்

பறையர்களுள் ஒரு பிரிவினரே பறை கொட்டுகின்றனர். இத்தொழில் பறையர் களுக்கு மட்டும் உரியதாக இல்லை. இன்று எண்ணிக்கையில் மிகுந்தவர் களாகவும் ஒரு காலத்தில் செல்வாக்கு மிகுந்தவர்களாகவும் இருந்த சாதியாரின் பெயர் அவ்வப்பொழுது அவர்கள் இன்று பல சாதியாரோடு மேற் கொள்ளும் தொழிலின் அடிப்படையில் அமைந்தது என்பது ஒரு சிறிதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. எட்கார் தரட்ஸன் முதலான ஆய்வாளர் கள் பறையரும் எயினரும் ஒரே இனக்குழுவைச் சார்ந்தவர்களே என்று குறிப்பிட்டுள்ளனர்.

கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நிகண்டான திவாகரத்தில் பறையர் என்ற சொல்லாட்சி காணப் படவில்லை. எனினும் எயினர் என்ற இச்சாதியாரைப் பற்றிய குறிப்புகள் பல விடங்களில் இடம்பெற்றுள்ளன. இவர்கள் அன்றைய சமூகத்தைச் சேர்ந்த மக்களுள் தனித்த இயல்பு வாய்ந்தவர் களாகக் காணப்படுவதோடு ஊர்களுள் மக்களிடையே வாழாமல் தங்களுக்கே உரித்தான தனித்த கோட்டைகளில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆம்பூர், வேலூர் ஆகியனவற்றை இவர்களுக்கு உரிய இத்தகைய கோட்டைகள் இருந்த இடங் களாகக் கூறுவர். எயினர்களான இவர்கள் பறையரின் மூதாதையராகலாம்" (மேற்படி நூல்,பக்.82) என்று சொல்வதிலிருந்து பறையர்கள் மிகப் பழமையான குடிகள் எனக் கருதலாம். இவ்வளவு பழமையான குடிகள் சங்க இலக்கியத்துள் குறிப்பாக புறம் 335ஆவது பாடல் தவிர பிற பாடல்களில் “புலையன்“ என்ற பெயரில் கீழானவர்களாக, இழி பிறப்பாளர்களாக, இழிவானவர்களாகக் குறிக்கப்பட்டுள் ளமை ஆய்வுக்குரியதாகும்.

*"கட்டி னிணக்கு இழிசினன்*
*கையது" (புறம் 121 - 3)*

*"இழிபிறப் பாளர் கருங்கை சிவப்ப*
*வலிதுரந்து சிலைக்கும் வன்கட்*
*கடுந்துடி" (புறம் 170: 5 - 6)*

*'மடிவாய் தண்ணுமை யிழிசினன்*
*குரலே" (புறம்289:10)*

*"புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி*

*புலைய னேவப் புனமே லமர்ந்துண்*

*டழல்வாய்ப் புக்க பின்னும்' (புறம்*
*360.18 - 20)*

மேற்கண்ட பாடல்களில் அவர்கள் கட்டில் பின்னுதல், துடி கொட்டுதல், தண்ணுமை முழக்குதல், இடுகாட்டில் இறப்புச்சடங்கினை மேற்கொண்டு அங்கு வைக்கப்படும் கீழான உணவை உண்ணுதல் என்ற நிலையில் காட்டப் பட்டுள்ளனர். இத்தொழில்கள் யாவும் அக்காலச் சமூகத்தில் இழிவானவை யாகக் கருதப்பட்டுள்ளன என்பதை இது காட்டுகிறது. எனவேதான் இழிசினன், இழிபிறப்பாளர், புலையன், ஆகிய சொற்களால் இவர்கள் சுட்டப்பட்டுள்ள னர். இவற்றின் மூலம் சங்க காலச் சமூகத்தில் தொழில் அடிப்படையில் அல்லாமல் பிறப்பின் அடிப்படையிலும் ஒருவனை இழிந்தவனாக, கீழானவனாக மதிப்பீடு செய்யப்பட்டமை விளங்குகிறது.

இது ஆரியரியர் செல்வாக்கின் விளைவால் நிகழ்ந்தது என்பதைவிட சங்க காலத் தமிழ்ச் சமூகத்திலேயே செய்கின்ற தொழிலால் ஒரு சமூகம் இழிவானதாக கருதப்பட்டமை புலனாகின்றது. இப்பழமையான குடிகள் ஆரியரின் சாதி வேறுபாட்டால் மேலும் சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப் பட்டமையை இதன்மூலம் நாம் அறியமுடியும்.

### எயினர்

சங்க இலக்கியம் முழுவதும் பாலை நிலத்து குடிகளாகக் குறிப்பிடப்படும் எயினர் என்போர் தங்களுக்கென்று தனி நாடுகளையும் கோட்டைகளையும் கொண்டு வாழ்ந்த குடிகள் என்பதற்கு

புறநானூற்றில் குறிப்பொன்றுள்ளது.

*"வென்றெறி முரசின் வேந்த ரென்றும்*

*வண்கை யெயினன் வாகை யன்ன" (புறம் 351:56)*

வாகை என்பது எயினனுக்குரிய ஒரு நகரம் என்று குறிப்பிடுவதிலிருந்து எயினர்கள் ஆட்சியாளர்களாக இருந் தமை புலப்படுகிறது. இந்த எயினர்கள் பறையரின் முன்னோர்கள் என்பர் சிலர். எனினும் எயினர் என்ற இச்சாதியாரைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. இவர்கள் அன்றைய சமூகத்தைச் சேர்ந்த மக்களுள் தனித்த இயல்பு வாயந்தவர்களாக காணப்படுவ தோடு ஊர்களுள் மக்களிடையே வாழாமல் தங்களுக்கே உரித்தான தனித்த கோட்டைகளில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆம்பூர், வேலூர் ஆகியனவற்றை இவர்களுக்கு உரிய இத்தகைய கோட்டைகள் இருந்த இடங்களாகக் கூறுவர். எயினர்களான இவர்கள் பறையரின்மூதாதையராகலாம் "(தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி-63) எனக்குறிப்பிடுகிறார் எட்கார் தர்ட்ஸன்.

மறவர். எயினர், ஒலியர். ஒவியர். அருவலர், பரத்துவர் இவர்கள் நாக வமிசத்தை சேர்ந்தவர். பூர்வீக தமிழ் நூல்களில் மறவன், எயினன், என்கிற வார்த்தைகளை அடிக்கடி காணலாம். அவர்கள் வில்வித்தை தெரிந்தவர்களாகவும் யுத்த வீரர்களாகவுமிருந்தார்கள். பாண்டிய நாட்டில் இப்பொழுதுகூட மறவர்களை அதிகமாய் பார்க்கலாம் பூர்வீக காலமுதல் எயினர்கள் பல்லவ, சோழநாட்டிலிருந்தார்கள். பறையர் என்போர் மேல்குறித்த எயினர்தான். இவர்களை தற்காலத்திலும் கூட வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சாவூர் ஜில்லாக்களில் அதிகமாய் காணலாம். இவ்விடங்களில் தான் எயினர் முன் காலத்திலிருந்தது" (டி.கோபால் செட்டியார், 1920:5)

இவ்வாறு உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் "பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களின் செல்வாக்குக் குன்றிய பிறகு ராஜியங்களும் மதங்களும் மாறின போது, பறையர் அரசர்கள் தங்கள் தேசத்தையும் பறையர் கனவான்கள் தங்கள் செல்வத்தையும் பறையரில் தாழ்ந்தவர்கள் தங்கள் எல்லாவற்றையும் இழந்தார்கள்" (மேற்படி நூல், பக்.11)

சங்கச் சமூகத்தின் பிற்பகுதியில் ஆரிய பார்ப்பார் ஏற்படுத்திய சாதிப் பாகுபாடுகளின் விளைவாக இவர்கள் புலையர்கள் என அடையாளப்படுத்தப் பட்டனர். இக்காலத்தில் பட்டியல் இனத்தினர் என்று பொதுப்பட அழைக்கப்படும் சமூகத்தினர் மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படக் காரணமாக இருந்தது ஆரியரின் சாதிக் கோட்பாடுகளே.

## முடிவுரை

*"துடியன் பாணன் பறையன் கடம்பனென்*

*றிந்தான் கல்லது குடியு மில்லை" (புறும் 335:7 - 8)*

என்பதற்கு இணங்க, உலகின் பிற சமூகங்களில் காணப்படும் அடிமைகள் போன்று அல்லாமல் இவர்கள் தன்னிச்சையான குடிகளாக இருந்துள்ளனர். "நாளாவட்டத்தில் புலையராக ஒதுக்கப் பட்ட புறச்சாதிகள் பெருகின. அவர்கள் வடபுலத்தைக் காட்டிலும் அதிகமாகத் தென்னாட்டில் அல்லலுற்றனர். இழிந்தவை என்று கருதப் பெற்ற தொழில்களைப் புரிந்தும் பண்ணை யாட்களாகப் பயிர்த் தொழில் புரிந்தும் ஊருக்கு அப்பாலுள்ள சேரிகளில் அவர்கள் காலந்தள்ளினர்; ஆயினும் அவர்களை அடிமைகளாகக் கருத முடியாது; அவர்களை உடமையாக விற்கவோ வாங்கவோ உரிமை பெற்றோர் எவரும் இலர், அவர்கள்மீது

கட்டுப்பாடுகளை வருக்கவும் நிறைவே ற்றவும் அவர்களின் உறவுமுறைக் கூட்ட ங்களும் சாதித் தலைவர்களுமே அதிகாரம் பெற்றிருந்தனர் "(ஆ. சிவசுப்பி ரமணியன், 1971:21)

என்பதிலிருந்து மேற்கண்ட குடிகள் அனைத்தும் தன்னிச்சையான குடிகள் என்பது விளங்கும். இவ்வகையான சமூகப் புறக்கணிப்புகள் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இன்று வரை நீடித்து வருவது தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்பட்ட ஒரு பேரிழிவாகும். சங்க காலச் சமூக வரலாற்றில் பாணர், பறையர் எயினர், துடியர், புலையர், கடம்பன் ஆகிய குடிகள் சமூக இயங்குதளத்தில் உயர்நிலையிலிருந்து சமூகத்தின் விளிம்புநிலைக்குத் தள்ளப் பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதைச் சங்கச் சான்றோர் தங்கள் பாடல்களில் விருப்பு வெறுப்பின்றி பதிவு செய்துள்ளனர்.

தமிழக வரலாற்றில் சங்க காலம் பொற்காலமல்ல; சங்க காலச் சமூகத்தில் வறுமையும், பசியும், பிறப்பால், தொழிலால் வேறுபாடும் நிலவின. அது ஒரு சமச்சீரற்ற, சமூகமாகவே அமைந்திருந்தது. இதனை சங்க இலக்கியங்கள் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அரசியல், சமூகப், பொருளாதார நிலைகளிலிருந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட, அல்லது மையப்படுத்தப் பட்டச் சமூகத்திற்கு வெளியே வாழ்ந்த, வாழ நிர்பந்திக்கப்பட்ட இனக்குழு வாழ்க்கையும், வாழ்வின் எல்லா வளங் களையும் நுகர்ந்து வாழ்ந்த மேட்டிமை சமூக வாழ்க்கையும், சமூகம் என்னும் அமைப்பில் அடங்காத தன்னிச்சையான மனிதர் வாழ்க்கையும் அவரவர் புரிதலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவே சங்கப் புலவர்களின், சங்க இலக்கியத்தின், புறநானூற்றுப் புலவர் களின் தனிச்சிறப்பாகும். இதுவே சங்க இலக்கியம் இன்றுவரை உயிர்ப்போடு இருப்பதற்கு உந்து சக்தியாகவும் விளங்குகிறது.

### பயன்பட்ட நூல்கள்


- புறநானூறு மூலமும் உரையும், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை. கழக வெளியீடு, சென்னை, 1951.
- தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், கே.கே. பிள்ளை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1972.
- தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி - 6,8. ஆங்கில மூலம் எட்கார் தர்ட்ஸன், (த.ஆ) முனைவர் க. இரத்தினம், தமிழ்ப் பல்கலைக் கழகம், 1993.
- தமிழர் நாகரீகமும் பண்பாடும், அ. தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, சென்னை, 1994.
- திவாகரம் நிகண்டு, இரண்டாம் தொகுதி, (பதி. ஆ) மு. சண்முகம் பிள்ளை, இசுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகம், 1993.
- ஆதிதிராவிடர் பூர்வ சரித்திரம், டி.கோபால் செட்டியார், சென்னை, 1920.
- விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், நிறப்பிரிகை வெளியீடு, கும்பகோணம், 1998.
- தமிழகத்தில் அடிமைமுறை, ஆ சிவசுப்பிரமணியன், காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2005.
- Drama in Ancient Tamil Society. N.C.B.H. Chennai, 1981.